## இறுதிச் செபம்:

இறுதிச் செபத்தைச் சொல்ல மற்றொரு அதிச உறுப்பினரை அழைக்கலாம்.



## முடிவு பாடல்:

### உன் புகழைப் பாடுவது

உன் புகழைப் பாடுவது
என் வாழ்வின் இன்பமையா
உன் அருளைப் போற்றுவது
என் வாழ்வின் செல்வமையா 2

1. துன்பத்திலும் இன்பத்திலும் நல்
தந்தையாய் நீயிருப்பாய்
கண்ணயரக் காத்திருக்கும் நல்
அன்னையாய் அருகிருப்பாய் 2
அன்பு எனும் அமுதத்தினை நான்
அறிந்திட எனக்களிப்பாய்
உன் நின்று பிரியாமல் நீ
என்றும் அணைத்திருப்பாய்
நீ என்றும் அணைத்திருப்பாய்

2. பல்லுயிரைப் படைத்திருப்பாய் நீ
என்னை ஏன் படைத்தாய்
பாவத்திலே வாழ்ந்திருந்தும் நீ
என்னை ஏன் அழைத்தாய் 2
அன்பினுக்கு அடைக்கும்தாள் ஒன்று
இல்லை என்றுணர்ந்தேன்
உன் அன்பை மறவாமல் நான்
என்றும் வாழ்ந்திடுவேன்
நான் என்றும் வாழ்ந்திடுவேன்

INTERNAL CIRCULATION ONLY
*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio



# அதிசசிந்தனை



நம்பிக்கை:

## என் நிலையில் கிறிஸ்துவை அனுபவிக்கிறேன்

**நோக்கம்:** தூய ஆவியாரின் துணையுடன் தனிசெபம் மற்றும் சமூகத்துடன் கூடி செபிப்பதன் வழியாக இறை இயேசுவோடு நெருங்கிய உறவை எதிர்கொள்ள முடியும்.

## முன்னுரை :

இயேசுவோடு நாம் கொண்டுள்ள இணைப்புக் குறித்து புதிய ஏற்பாட்டில் பல வசனங்களைக் காணலாம். 1கொரி.6:17 ஒரு சிறந்த வசனம், ஹு"ஆண்டவரோடு சேர்ந்திருப்பவர் அவருடன் உள்ளத்தால் ஒன்றித்திருக்கிறார்ஹூ. இறைவனோடு ஒரே எண்ணம் கொண்டிருப்பது என்றால் என்ன? கிறிஸ்து நம்முள்ளும், நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதும், இயேசு நம்முடன் இரண்டற கலந்து, ஒன்றாகி விட்டதைக் குறிக்கிறது. இறைவனுடன் ஆவியில் ஒன்றித்து இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். இறைவனுடன் ஒன்றாக இருப்பது ஹு"நான் கிறிஸ்துவுக்குள்ஹூ என்ற அனுபவத்தை தருகிறது.



# இறைவார்த்தை:

### யோவான் 15:5

நானே திராட்சைச் செடி, நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னைவிட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய இயலாது.

## ஆரம்பப் பாடல்:

### ஆலயத்தில் நாம் நுழைகையிலே

ஆலயத்தில் நாம் நுழைகையிலே
புது நினைவுகள் நுழைகின்றன
அந்த நினைவுகளின் புது வருகையிலே
நம் நெஞ்சங்கள் நிறைகின்றன ஆ...
ஆலயத்தில் நாம் நுழைகையிலே
புது நினைவுகள் நுழைகின்றன

1. அன்பான மகனை பலி கொடுத்த
   ஆபிரகாம் இங்கே தெரிகின்றார் 2
   பண்பான ஆட்டினை பலியீந்த
   ஆபேலும் இங்கே தெரிகின்றார்

2. யெருசலேம் ஆலயம் நுழைந்தவுடன்
   இயேசுவும் அங்கே மொழிந்தாரே 2
   என் வீடு – இது செப வீடு
   வன்கள்ளர் குகையாய் ஆக்காதீர்

3. விதைவையின் காசும் தெரிகின்றது
   பல விதமான யூதரும் தெரிகின்றனர் 2
   விம்மிடும் பாவியின் குரலொலியின்
   விண்ணக எதிரொலி கேட்கின்றது

## உரையாடல்:

நான் கடசான் சமூகத்ததைச் சார்ந்தவர். என் கணவர் ஒரு சீனர். எங்களுக்கு நான்கு குழந்தைகள். எங்கள் திருமணம் தேவாலயத்தில் நடைபெற்றது. அவர் புத்த சமயத்தைச் சார்ந்தவர். நான் கத்தோலிக்கர்.

என் வாழ்வில் விசுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தேன். திருப்பலியில் இசை வாசிக்கும் துறையில் பணியாற்றி வருகிறேன்.

மனைவியாகவும் தாயாகவும் பரபரப்பான வாழ்க்கையில் பயணித்துக் கொண்டிருந்தேன். ஆனால் குடும்பப் பொறுப்புகள் எந்த வகையிலும் என் விசுவாச மற்றும் பணி வாழ்வை பாதிக்கவில்லை. என் குழந்தைகளை என்னுடன் ஆலயத்திற்கு அழைத்துச் செல்வேன். என் குழந்தைகளுடன் ஆலயத்திற்கு செல்வதை என் கணவர் ஒரு நாளும் தடுத்தது இல்லை. இறைவனுக்கு நன்றி. ஆனால் மற்றவர்கள் குடும்பமாக திருப்பலிக்கு வருவதைக் காணும்போது என் குடும்பமும் அவ்வாறு இருக்க வேண்டுமென எண்ணிக் கொள்வேன்.

குருவானவர், அருட்சகோதரிகள் மற்றும் நண்பர்களின் ஊக்கமும் செபமும் என் விசுவாசத்தை ஆழப்படுத்தியது. நாங்கள் ஒரு கத்தோலிக்கக் குடும்பமாக தொடர்ந்து செபித்தோம். என் கணவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது சற்று கடினமான காரியம் என்று எனக்குத் தெரியும். தொடர்ந்து செபத்தில் ஒப்புக் கொடுத்தேன். அதிச செபக்கூட்டம், செபமாலை, இரக்கத்தின் ஆண்டவர் மன்றாட்டு மாலை செபம் போன்ற செப வழிபாடுகள் என் வீட்டில் நடைபெறும். குடும்பப் பொறுப்புகள் கஷ்டமாக இருந்தாலும் மகிழச்சியோடு என்னால் செய்ய முடிகிறது. கடவுளின் வல்லமைதான் இதற்கு காரணமென்று நம்புகிறேன்.

மீட்பர் இயேசுவை சந்திக்க என் கணவரின் மனமும் எண்ணமும் ஒளிபெறும் என்ற நம்பிக்கையில் தொடர்ந்து செபித்தேன். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு என் செபம் கேட்கப்பட்டது. இறைவனுக்கு நன்றி. 2017ம் ஆண்டு என் கணவரும் நான்கு பிள்ளைகளும் கிறிஸ்துவை தங்கள் மீட்பராக ஏற்று, திருமுழுக்குப் பெற்றனர். என் மகிழ்ச்சியை வார்த்தைகளால் விவரிக்க முடியவில்லை. எப்பொழுதும் என்னுடன் பயணித்து, என் குடும்பத்தைப் பாதுகாத்து, ஆசீர் வழங்கி வந்த வல்லமைமிக்கக ஆண்டவருக்கே புகழ். (தனி ஒருவரின் விசுவாசப் பயணம்)

அருகில் உள்ளவருடன் கலந்து பேசவும். மீண்டும் மற்றவருடன் கலந்து பேசவும்.

- இக்கதையிலிருந்து எது உங்கள் மனதைத் தொட்டது?
- உங்கள் இறை அனுபவத்தை பகிரவும்...

## சிந்தனை:

1. தூய ஆவியாரை நோக்கி செபியுங்கள் (மனம் திறந்து இறை இயேசுவைச் சந்திக்கவும், அவரால் ஆட்கொள்ளப்பட்டு வல்லமைப் பெற)
2. வாசகப் பகுதியை இரண்டு அல்லது மூன்று முறை வாசிக்கவும். (ஓவியங்கள், படங்கள், காணொளி, நாடகம் வடிவம் போன்றவைகளைப் பயன்படுத்தலாம்...)
3. இறைவார்த்தையில் நிலைத்து அமைதியாக இருக்கவும்
4. எந்த வார்த்தைகள், வசனங்கள் அல்லது கருத்துகள் என் மனதைத் தொட்டது? (குறிப்பிடவும்)
5. தூய ஆவியானவர் கூறும் செய்தி என்ன அல்லது எனக்குக் கூறும் செய்தி என்ன? (குறிப்பிடவும்)
6. சிறியக் குழுகளில் பகிர்ந்து கொள்ளவும் (3-4 பேர்) 4 & 5 எண் கேள்விகள் குறித்து.

## செயல்:

சற்று நேரம் அமைதியாக இருப்போம்...

- உங்கள் வாழ்வில் கடவுள் அனுபவத்தைப் பெற எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன? (அருகில் உள்ளவரிடம் கலந்து பேசவும்)

## தொடக்கச் செபம்:

செபம் சொல்ல அதிச உறுப்பினர் ஒருவரை அழைக்கலாம்